(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 154.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2011 திசெம்பர் 15, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1311/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010, 2011 ஆகிய வருடங்களில்,

(i) மின்வலு, எரிசக்தி அமைச்சுக்கு உரித்தல்லாத கட்டிடங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்கான மொத்த செலவினத்தையும்;

(ii) வாடகை அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்களின் சதுர அடிக்கான வாடகைப் பெறுமதியையும்;

(iii) இக் கட்டிடங்களுக்கான குத்தகைக்காலத்தையும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) மின்வலு, எரிசக்தி அமைச்சு தொடர்பாக மேற்படி வருடங்களில்,

(i) அமைச்சுடன் தொடர்புடைய ஏதாவது அமைப்புகளுக்கு உரித்தில்லாத வாகனங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்குச் செலவுசெய்த மொத்தப்பணத்தையும்;

(ii) சொந்தமாக உள்ள வாகனங்களின் மொத்த எண்ணிக்கையையும்;

(iii) ஏனைய வெளிவள சேவைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்கூறப்பட்ட வெளிவள சேவைகளுக்கு ஏற்பட்ட செலவினத்தையும்;

(v) வெளிவள அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையையும்;

(vi) பணியாட்களின் மொத்த எண்ணிக்கையையும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1335/ '11

2.

கௌரவ புத்திக்க பத்திரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மதஅலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த யுத்த காலத்தில் வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர்கள் பெரும் அர்ப்பணிப்புச் செய்தனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது அங்கவீனம் அடைந்ததனால் 12 வருட சேவைகாலம் பூர்த்தி அடைவதற்கு முன்னர் மருத்துவ காரணங்களினால் ஓய்வுபெற்றுள்ள, அங்கவீனத்துக்கான ஓய்வூதியத்தை மாத்திரம் பெறுகின்ற இராணுவத்தினருக்கும் 12 வருடத்துக்கு மேற்பட்ட சேவைக்காலத்தை கொண்ட இராணுவத்தினருக்குப் போன்று ஓய்வூதியம் செலுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஓய்வூதிய திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகின்றது என்பதையும்;

(ii) இதுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) அங்கவீனம் அடைந்ததற்கான ஓய்வூதியம் பெறுகின்ற படை வீரர்களுக்கு சேவை ஓய்வூதியம் செலுத்துவதை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணம் என்ன;

(ii) அந்த சேவை ஓய்வூதியத்தை துரிதமாக வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(iii) அவ்வாறெனின் அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1484/ '11

3.

கௌரவ அஜித் குமார,— பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1598/ '11

4.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கும் விதத்தில் ஒன்பது விளையாட்டரங்குகளை நவீனமயப்படுத்துவதற்கு அல்லது புதிதாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதற்கென தெரிவு செய்யப்பட்டுள்ள பழைய விளையாட்டரங்குகள் அல்லது புதிய இடங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு விளையாட்டரங்கிற்காகவும் ஏற்கெனவே உள்ள நிலப்பரப்பிற்கு மேலதிகமாக புதிதாகப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ள காணிகளின் அளவுகள் ஏக்கர்களில் வெற்வேறாக யாதென்பதைம்;

(ii) விளையாட்டரங்குகளை நவீனமயப்படுத்துவதற்காக அரசுக்குச் சொந்தமில்லாத தனியார் காணிகள் பெறப்படுமாயின், சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் அவர்களிடமிருந்து பெறப்படும் காணித்துண்டுகளின் விலைமதிப்பீட்டுப் பெறுமதி யாதென்பதையும்;

(iii) அந்தக் காணிகளை வழங்குவதற்காக இவர்களின் சம்மதத்தைத் தெரிவிக்கும் சட்டரீதியான ஆவணங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1661/ '11

5.

கௌரவ ஈ. சரவணபவன்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தின் நாகர்கோவில் பிரதேசத்தில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில் மேற்படி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மூலமாக நன்மை பெறுகின்றவர்களின் எண்ணிக்கை யாது;

(iii) 2010 ஆம் ஆண்டுக்கான பொருளாதார முன்னேற்ற அறிக்கைக்கிணங்க நாகர்கோவில் வர்த்தக பல்கூட்டுத்தொகுதியை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட 5.8 மில்லியன் ரூபாவுக்கு என்ன நேர்ந்தது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1669/ '11

6.

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் இயங்கிவந்த வெளிநாட்டு பெற்றோலியக் கம்பனிகள் யாவையென்பதையும்;

(ii) அக் கம்பனிகள் எந்த நாடுகளுக்கு சொந்தமானவை என்பதையும்;

(iii) மேற்படி வெளிநாட்டு பெற்றோலியக் கம்பனிகள் இயங்கிவந்தமையின் காணமாக இந்நாட்டிற்கு ஏற்பட்ட தாக்கங்கள் யாவையென்பதையும்;

(iv) இக்கம்பனிகள் எந்த ஆண்டில் அரசுடைமையாக்கப்பட்டன என்பதையும்;

(v) இதன் பொருட்டு செயலாற்றிய அரசாங்கம் யாதென்பதையும்;

(vi) பெற்றோலியக் கம்பனிகள் அரசுடைமையாக்கப்பட்டதனால் இந்நாட்டிற்கு ஏற்பட்ட வெளிநாட்டுத் தாக்கங்கள் யாவை என்பதையும்;

(vii) மேற்படி தாக்கங்களை தணிப்பதற்காக அப்போதைய அரசாங்கம் செயலாற்றிய விதம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1701/ '11

7.

கௌரவ அனுர திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின்போது மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படும் பாடங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பாடங்களுக்கும் வழங்கப்படும் சித்திகளின் வகைகள் யாவையென்பதையும்;

(iii) கடந்த ஐந்து வருட காலப் பகுதியில் மேற்படி பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்குறித்த சித்திகள் வழங்கப்படும் போது அடிப்படையாகக் கொள்ளப்பட்ட புள்ளிகளின் வரையறைகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த ஐந்து வருட காலப் பகுதியில் மேற்படி பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திற்கும் பெறப்பட்ட ஒவ்வொரு சித்திகளின் எண்ணிக்கை மற்றும் சதவீதங்கள் வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 12 ஆம், 13 ஆம் மற்றும் 14 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கை இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2012) — (ஒதுக்கப்பட்ட பத்தொன்பதாவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, திசெம்பர் 14)

* 2.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 8, 14, 18, 30, 42, 139இ, 139ஏ அத்துடன் 231 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதிய 1722/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

மின்வலு, எரிசக்தி அமைச்சர்,— இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி (இல.1),— 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் 67 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் உட்பிரிவு (2), 17 ஆம் பிரிவின் உட்பிரிவு (2) பந்தி (அ), மற்றும் 18 ஆம் பிரிவின் உட்பிரிவின் (2) பந்தி (அ) இன் கீழ் மின்வலு, மின்சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே மாதம் 10 ஆம் திகதிய 1705/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2011.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிப்படுமாக.

* 4.

மின்வலு, எரிசக்தி அமைச்சர்,— இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி (இல.2),— 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலை பெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 36 ஆம் பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் மின்வலு, மின்சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 யூலை மாதம் 20 ஆம் திகதிய 1715/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2011.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிப்படுமாக.

* 5.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 6.

கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும், புனர் வாழ்வளித்தலும்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2011 செத்தெம்பர் மாதம் 16 ஆம் திகதிய 1723/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 477 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 527 ஆம் பிரிவின் கீழ் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 ஓகத்து மாதம் 22 ஆந் திகதிய 1720/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2011 ஓகத்து மாதம் 09 ஆம் திகதிய 1718/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.11.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2011 ஒற்றோபர் மாதம் 13 ஆம் திகதிய 1727/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.11.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதிகள் தீர்வைகள் சம்பந்தமாக 2011 நவெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1733/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை மற்றும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(3) ஆம் பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2011 நவெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1733/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2011 நவெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1733/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்தொகுதி கல்லூரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

இலங்கை முதலீட்டுச் சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 17.

வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 18.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 21.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 22.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 23.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 24.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 25.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 26.

நீதி அமைச்சர்,— குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதிய 1725/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2011.11.28 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 27.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 28.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 29.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011),— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

30.

ரி.பீ. ஏக்கநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

குமாரசிறி ஹெட்டிகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

இலங்கைப் புவிச்சரிதவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

ஹந்தகல வலகம்பா புராண கல்லென் ரஜமகா விஹாரஸ்த அபிவிருத்தி சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

ஸ்ரீ பியரத்தன சமூக அபிவிருத்தி மற்றும் சமூக அடிப்படை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

36.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2012) என்னும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" என்னும் தனியிதழிற் பார்க்க.